by slums for clearance purposes. Section 20 of the Act stipulates that the compensation payable for any land acquired under this Act shall be the market value. Some of the lands taken over pertain to proceedings under the Tamil Nadu Slum Improvement (Acquisition of Land) Act, 1954, which was struck down by the High Court. There are some legal hurdles in bringing such land within the scope of the provision for determining the compensation under the Slum Areas (Improvement and Clearance) Act, 1971. The determination of compensation payable under the 1971 Act by the competent authority is held up on this account. As to the question of acquiring private land for slum clearance purposes, the gravity of the situation that the slum-dwellers are living there is the criterion.

THIRU D. V. D'MONTE: Sir, according to the provisions of the Act, as stated by the Hon. Minister, compensation must precede take-over. That is not being done.

THE HON. THIRU S. RAGHAVANANDAM: Mr. Deputy Chairman, Sir, I am not quite clear about it. If the hon. Member puts a separate question, I will answer it.

திரு. ஜார்ஜ் கோமகன் : இது போன்ற வழக்குகள் எத்தனை இருககின்றன என்ற விவரத்தை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தனிக் கேள்வி போடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

Section Officers in Highways Department.

* 168 Q.—THIRU V. THANGAPANDIAN : (on behalf of Thiru A. BALASUBRAMANIAM) : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) the number of persons promoted as Section Officers and Union Engineers in the Tamil Nadu Highways Department before 1973 ; and

(b) among them, the number of persons whose services have not yet been made permanent ?

1978 மார்ச் 2]

நெடுஞ்சாலைத் துறையில் பிரிவு அலுவலர்கள்.

திரு. வே தங்கப்பாண்டியன் (திரு. ஆ. பாலசுப்ரமணியம் சார்பில்): மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்நாடு அரசு நெடுஞ்சாலைத் துறையில் 1973-க்கு முன்னதாக பிரிவு அலுவலர்களாக (Section Officers, Union Engineers) பதவி உயர்வு பெற்றோர் எத்தனை பேர்?

(இ) இவர்களுள் இன்னும் பணி நிரந்தரம் செய்யப்படாமல் இருப்பது எத்தனை பேர்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பணித்துறையில் 1973-க்கு முன்னதாக 262 பேர்கள் பிரிவு அலுவலர்களாக பதவி உயர்வு பெற்றுள்ளனர்.

(இ) இவர்களுள் ஒருவரும் இன்னும் நிரந்தரம் செய்யப்படவில்லை.

திரு. வே. தங்கப்பாண்டியன்: 1973 ஆம் ஆண்டுக்கு முன்னால் ஏறக்குறைய 233 பேர் பதவி உயர்வு பெற்றதாகவும் அவர்கள் பணி நிரந்தரம் செய்யப்படாமலிருக்கிறது என்றும் அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அது தவிர செக்ஷன் ஆபீசர்கள், ஜூனியர் எஞ்சினியர்கள் போன்றவர்கள் அசிஸ்டண்ட் எஞ்சினியர்களாகப் பதவி உயர்வு பெறுவதற்கு பி.ஈ. டிகிரி பெற்றவர்களுக்கு மட்டுமே முன்னுரிமை கொடுப்பதால், இந்த அடிப்படை வேலையில் இருப்பவர்களுக்குப் பதவி வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. இதைப்பற்றி அரசு என்ன செய்ய இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பட்டதாரிப் பொறியியல் வல்லுநர்களுக்குப் பதவி உயர்வு அளிப்பதில் முன்னுரிமை அளிக்கப்படுவது ஏற்கெனவே அமுலில் இருந்து வருகிறது. காரணம் பட்டதாரிகளைப் பொறுத்தவரையில் அவர்கள் எஸ்.எஸ்.எல்.சி. படிப்பை முடித்துவிட்டு—அதிலும் குறைவான மதிப்பெண்களைப் பெற்று—மூன்று ஆண்டுகளில் பட்டப் படிப்பை முடித்துவிட்டு பணிக்கு வருகிறார்கள். அவர்களோடு பட்டதாரி எஞ்சினியர்கள் என்று கருதப்படுகிற 5 ஆண்டுகளுக்கான பட்டப் படிப்பை முடித்துவிட்டு, வருகிறவர்களை ஒப்பிட்டு, வேலை உயர்வு கொடுக்க வாய்ப்பில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

[1978 மார்ச் 2

திரு. வே. தங்கப்பாண்டியன் : 'பி.ஈ.' படித்திருக்கிறார்கள் என்பது One of the reasons ஆக இருக்க முடியும். பட்ட தாரிகளைப் பொறுத்த வரையில், அவர்கள் நீண்ட காலமாகத் தொடர்ந்த அனுபவம் உள்ளவர்கள். எனவே அவர்களின் அனுபவத்தைக் கணக்கில் கொண்டு அவர்களுக்குப் பதவி உயர்வு அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : அவர்களின் அனுபவத்தின் அடிப் படையில்தான் பட்ட தாரிகளுக்கு 3:1 என்ற விகிதத்தில் பதவி உயர்வுகள் அளிக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். சங்கரலிங்கம்: அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட இந்த 230-க்கு மேற்பட்டவர்கள் தங்கள் பணிகளில் நிரந்தரப் படுத்தப்படாமல் இருப்பதற்கு என்ன காரணம் என்பதைத் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தற்போது 116 நிரந்தரப் பதவி இடங்களை ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று அரசு பரிசீலித்து வருகிறது. 56 தற்காலிகப் பதவி இடங்களை நிரந்தரப் பதவி இடங்களாக ஆக்கும் செயற் குறிப்பு அரசாங்கத்தின் ஆய்வில் இருப்பதோடு 172 கூடுதல் பணி இடங்களை ஏற்படுத்த ஏற்பாடு செய்து வருகிறது.

Over-bridge across Railway line.

* 169 *Q.*—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether any proposal has been received from Thanjavur Municipality regarding reconstruction of the over-bridge across the Railway Line on the Medical College Road; and

(*b*) if so, the action proposed to be taken thereon ?

இரயில் பாதையின் மேல் மேம்பாலம்.

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மருத்துவக் கல்லூரிச் சாலையில், இரயில் பாதையின் குறுக்கே உள்ள மேம்பாலத்தைச் சீரமைப்பது தொடர்பாக தஞ்சாவூர் நகராட்சியிட மிருந்து செயற்குறிப்பு ஏதும் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அது குறித்து எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை யாது?